PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ஜெயின் போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Karumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org



# “சிக்னல் அட் 11.30' படத்தில் சர்ப்ரைஸ், எமோஷன், எண்டர்டெயின்மெண்ட் என அனைத்தும் இருக்கும்”- இயக்குநர் மலர்விழி நடேசன்!



சென்னை – 26 நவம்பர், 2026 பின்னணியில் உருவாகியுள்ள இப்படத்தில் எதிர்பாராத திருப்பங்களும், உணர்வுபூர்வமான காட்சிகளும் இடம்பெற்றுள்ளதாக இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், “ஒரு திரைக்கதை என்பது காகிதத்தில் இருக்கும் கற்பனை மட்டுமே. அதைத் திரைப்படமாக மாற்றுவது அதற்காக உழைக்கும் கலைஞர்களும் தொழில்நுட்பக் கலைஞர்களும்தான். ஒளிப்பதிவாளர் ராஜா பட்டாச்சார்ஜி ஒவ்வொரு காட்சியையும் படமாக்கிய விதம் கதைக்கு கூடுதல் வலு சேர்த்துள்ளது. இசையமைப்பாளர் டி. இமானின் இசை படத்தின் உணர்வுகளை ரசிகர்களிடம் கொண்டு சேர்க்க உதவியுள்ளது. பின்னணி இசையும் பாடல்களும் ஒவ்வொரு காட்சிக்கும் உயிரோட்டம் கொடுத்துள்ளன. இந்தக் கதைக்கு உணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தக்கூடிய நடிப்பு தேவைப்பட்டது. அந்த வகையில் சந்தோஷ் பிரதாப் தனது கதாபாத்திரத்தை முழுமையான அர்ப்பணிப்புடன் நடித்துள்ளார். பவ்யா திரிகா மற்றும் புஜிதா பொன்னாடா ஆகியோரும் சிறப்பாக நடித்துள்ளனர். படத்தொகுப்பாளர் ஆர். கலைவாணன் மற்றும் நடன இயக்குநர் ஷெரிப் ஆகியோரின் பங்களிப்பும் படத்தின் வேகத்திற்கும் விறுவிறுப்பிற்கும் உதவியுள்ளது. படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். படத்தின் ஒவ்வொரு திருப்பத்தையும், உணர்வுபூர்வமான காட்சிகளையும் ரசிகர்கள் திரையரங்கில் ரசிப்பார்கள் என நம்புகிறேன்” என்று தெரிவித்துள்ளார். மேலும், படத்தின் தலைப்புக்குப் பின்னால் இருக்கும் காரணம் கதையின் முக்கிய அம்சத்துடன் தொடர்புடையது என்பதால், அதனை இப்போது வெளியிட விரும்பவில்லை என்றும், அது ரசிகர்களுக்கு பெரிய ஆச்சரியமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அலர் ஸ்டுடியோஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படத்தில் சந்தோஷ் பிரதாப், பவ்யா திரிகா, புஜிதா பொன்னாடா, ஜெயப்பிரகாஷ், முனிஷ்காந்த் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். மலர்விழி நடேசன் மற்றும் டாக்டர் சிவானி சுப்ரமணியம் இப்படத்தை வழங்குகின்றனர். டி. இமான் இசையமைத்துள்ள இப்படத்திற்கு ராஜா பட்டாச்சார்ஜி ஒளிப்பதிவு செய்துள்ளார். ஆர். கலைவாணன் படத்தொகுப்பையும், ஷெரிப் நடன இயக்கத்தையும் மேற்கொண்டுள்ளனர். இப்படம் வரும் நவம்பர் 27ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.